தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1981 ஏப்ரல் 25.

சித்திரை 13, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும் ”.

செவிக்குக் கேள்வியாகிய உணவு இல்லாதபோது அதற்குத் துணையாக உடலை ஓம்புமாறு வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 872 மற்றும் 873 ஆகியவை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

கீரனூருக்கு அருகிலுள்ள ராமச்சந்திரா கெமிக்கல்ஸ் நிறுவனம்.

*வினா எண் 874.—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, கீரனூருக்கு அருகாமையில் ராமச்சந்திரா கெமிக்கல்ஸ் என்னும் கம்பெனி கடந்த பல ஆண்டுகளாக மூடிக் கிடப்பது அரசு அறியுமா?

(ஆ) அதன் விவரம் என்ன ?

(இ) அரசு கடன் எவ்வளவு பெற்றுள்ளது?

(ஈ) இயங்க அரசு ஆவன செய்யுமா ?

[1981 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ)-விலிருந்து (ஈ) வரை. ஆம்.
* விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப் பெற்றுள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, விவர அறிக்கையிலிருந்து அந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் அதனுடைய பொறுப்புக்கள் ஒரு சீரியஸ் நிலையை எட்டியிருக்கிறது. அரசைச் சேர்ந்த பொது நிறுவனங்களிடமிருந்து அந்தத் தொழிற்சாலைக்கு 1.31 கோடி ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும், இந்த விவர அறிக்கைப்படி, அது எப்போதும் மூடியே இருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் வாங்கிய பின்னரும் மூடிக் கிடக்கிறது என்றால் வேண்டுமென்றே இது ஒரு நிறுவனம் என்ற பெயரைப் பயன்படுத்தி, அரசாங்கப் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதனுடைய 'ப்ரொப்ரைட்டர்ஸ்' யார், யார்? அது சம்பந்தமாக ஸ்பெஷல் என்குயரி, கடன் வாங்கியதைப் பொறுத்தவரையில், நடத்தப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் ஸ்பெஷல் என்குயரி நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, இது எப்போதும் மூடியே இருக்கிறது என்பதைவிட எப்போதுமே உற்பத்தியை ஆரம்பிக்கவில்லை என்றுகூடச் சொல்லலாம். அவர்கள் கடன்களைப் பெற்று பம்பாயில் இருக்கிற ஒரு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு நிர்வாகப் பணிகள் எல்லாம் நடைபெற்றது. அதற்குப் பின்னர் அந்த நிறுவனத்திற்கும் இவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாகப் பணி முடியாமல் உற்பத்தி தொடங்கப்படவில்லை. இப்போது கடன் கொடுத்திருக்கிற நம்முடைய அரசு கார்ப்பரேஷன்கள் எல்லாம் கடனைத் திரும்பப் பெறுவதற்கு கோர்ட்டிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதனால் அந்தக் கம்பெனியை விற்க வேண்டிய நிலைமை வந்திருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இலட்சக்கணக்கில் நம்முடைய பொது நிறுவனங்களிலிருந்து அந்த நிறுவனத்திற்குக் கடன் கொடுத்திருந்தாலும் கூட அங்கே உற்பத்தியே ஆரம்பிக்கவில்லை என்று சொன்னார்கள். எப்போது அந்த நிறுவனத்திற்குப் பணம் கொடுக்கப்பட்டது? அவர்களால் அந்த நிறுவனத்தை செயல்படுத்த முடியவில்லை என்றால் அரசு ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே இதுவும் ஒன்று. அந்த நிறுவனத்தார் தொழிலைத் தொடங்காமலே

* 142-143 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

பணத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்ட ஆண்டு என்னிடம் இல்லை. ஆனால் 1977-க்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, அந்த நிறுவனத்திற்கு யார் யார் டைரக்டர்கள், எத்தனை பேர் டைரக்டர்களாக இருக்கிறார்கள் ? இப்போது மானேஜிங் டைரக்டர் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. என். இராமச்சந்திரன், திரு. என். சீனிவாசன் என்ற இருவரும் சகோதரர்கள், அவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தான் பொறுப்பாளர்கள்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, ஒரு கோடியே 31 இலட்சம் ரூபாய் நம்முடைய பல்வேறு துறைகளிலிருந்து கடனாகப் பெற்றிருக்கக்கூடிய ரூபாயாகும். அப்படிக் கடனாகப் பெற்றிருக்கக்கூடிய இந்தத் தொழிற்சாலையில் இயந்திரங்கள் ஏதாவது இருக்கின்றனவா? அப்படி ஏதாவது இயந்திரங்கள் நிறுவப்பட்ட பிறகு வேலை நடைபெறாமல் இருக்கின்றதா? இவ்வளவு பணம் பெற்றுக்கொண்டு எதுவுமே செய்யாமல் பணம் மோசடி செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது ஏதாவது இயந்திரங்கள் இருந்தால் நாமே எடுத்து நடத்துவதற்கு முயற்சி எடுத்தால் என்ன ? அது தேசியச் சொத்தல்லவா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கையிலே இருக்கின்றது. அதற்கு மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கின்ற ஆவலைப்போன்று அதாவது அங்கே ஏதாவது இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கும் இருக்கின்றது. நான் இன்னும் உள்ளே போய்ப் பார்க்கவில்லை. நம்முடைய தொழில் துறையிலே இருக்கின்ற உயர் அதிகாரிகள் யாரையாவது அனுப்பி அங்கே என்ன இருக்கின்றது என்பதைப் பார்த்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து கேட்டால் அவர்களுக்குத் தக்க தகவலை நான் நிச்சயமாகத் தருகிறேன்.

[1981 ஏப்ரல் 25

பேரணாம்பட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 875.—திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டில் துவங்க இருக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலை இவ்வாண்டே துவங்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்க வேலை ஆரம்பிக்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டில், தோல் பதனிடும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் பதிவாகி கட்டிடம் கட்ட நிலம் வாங்குவதற்கு ஏற்பாடு நடந்து வருகிறது. தொழிற்சாலை 1981-வது ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்றும் உற்பத்தி 1982-ல் துவங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் துவங்கப்பட்ட தொழிற்சாலையின் மதிப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் இது தோல் பதனிடுகின்ற ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கம். அதிலே 56 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே இருந்து பங்குத் தொகையாக 1,16,500 ரூபாய் வசூலிக்கப்பட்டு ஏறத்தாழ 3.54 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் வாங்கப்பட்டு அதிலே இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்பட இருக்கின்றது.

காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் கோயில் திருமண மண்டபம்.

*வினா எண் 876.—திரு. சி. த. சிதம்பரம்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன் கோவிலில் திருமண மண்டபம் கட்ட திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம். இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் ஆலயத்தின் சார்பில் ரூ. 1,50,000 மதிப்பீட்டுச் செலவில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.